# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 13 வியாழக்கிழமை 29.08.2024 கதிர் 346







# என் மீது நம்பிக்கை வைத்து தேர்தலில் ஆணை தாருங்கள்

- விஞ்ஞானத்தை வெளியிட்டு ஜனாதிபதி ரணில் வேண்டுகோள்
- யாரையும் பாதுகாக்க கதிரையில் அமரவில்லை என்கிறார்



என் மீது நம்பிக்கை வைத்து ஆணையை தாருங்கள் பயனுள்ள, வளமான நாட்டை கட்டியெழுப்புகிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

“ரணிலுடன் இணைந்து நாட்டை வெல்வதற்கான ஐந்தாண்டுகள்” என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வியாழக்கிழமை காலை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

சர்வமத வழிபாடுகளுடன் சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2➤

# புதிய அரசியலமைப்பு வரும்வரையில் 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்

- ஆறு மாதங்களில் மாகாண சபைகளுக்குத் தேர்தல்
- விஞ்ஞானத்தை வெளியிட்டு வைத்தார் சஜித்

அனைத்து இனம் மற்றும் மதத் தலைவர்கள், மக்களின் ஆசீர்வாதத்துடன், புதிய அரசியலமைப்பொன்று இலங்கையில் கொண்டுவரப்படும் வரை 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என்பதுடன், ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்து ஆறுமாதகாலப் பகுதிக்குள் மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட சஜித் பிரேமதாச, அதில் வடக்கு, கிழக்குக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளார்.

2➤





# தேர்தல் பரபரப்பின் மத்தியில் அஜித் டோவல் திடீர் விஜயம்

ஜனாதிபதித் தேர்தல் குறித்த பரபரப்பில் இலங்கை மூழ்கியிருக்கும் நிலையில், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல் இன்று வியாழக்கிழமை இலங்கைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அஜித் குமார் டோவல் இந்தியாவிற்கான முன்னாள் இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவை சந்தித்துள்ளார். இதன்போது இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் உத்தேச திட்டங்கள் அடங்கிய அறிக்கையை இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வழங்கியுள்ளார்.

வீதி, ரயில் மார்க்கம், மின்சாரம் மற்றும் எரிபொருள் ஆகிய பிரிவுகளின் கீழ் இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையே நேரடி தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பின் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகள் வலுப்பெற்று இலங்கையின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3 வீதத்தில் இருந்து 6 வீதமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல், இன்று மாலை தமிழ் தேசிய கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தொடர்பில் ஏனைய இரண்டு பிரதான வேட்பாளர்களாக உள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் சாதகமான காரணிகள் எதனையும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கவில்லை.

ஆனால், சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசிலமைப்பின் ஒருபகுதியாக உள்ள 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் எனக் கூறியுள்ளார்.

"மதத் தலைவர்கள், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து முறையாக கருத்துக்களைப் பெற்று தற்போதைய அரசியலமைப்பை மாற்றி புதிய அரசியலமைப்பை உருவாக்க ஐக்கிய மக்கள் சத்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி அர்ப்பணிப்புடன் உள்ளது.

இந்த செயல்முறையில், எமது கொள்கை என்னவென்றால், தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய நாடாளுமன்ற முறைமைக்கு மாற்றுவதாகும்.

முடிவெடுக்கும் செயல்முறையில் குடிமக்களை செயலில் ஈடுபடுத்த கிராம அரசு மற்றும் நகர அரசு எனப்படும் சமூக அடிப்படையிலான ஜனநாயக நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும் வரை, 13வது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

அரசியலமைப்பு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஜனாதிபதியினால் ஒருதலைப்பட்சமாக மீண்டும் பொறுப்பெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்பதுடன், மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை வலுப்படுத்தி, மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவோம்.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் தேவையான முறையில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவோம்." எனவும் கூறியுள்ளார்.

"6 மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும், மேலும் அதிகபட்ச நிதி திறன் மற்றும் செயல்திறனுடன் மாகாண சபைகள் செயல்படுவதை உறுதிசெய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு அலுவலகம் ஆகியவை வலுப்படுத்தப்பட்டு அவற்றின் நோக்கங்களை திறம்பட செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்ற வசதிகளை வழங்குவோம். பாதுகாப்புத்தேவைகளுக்கு தேவையற்ற அனைத்து நிலங்களும் தாமதமின்றி அவற்றின் உரிமையாளர்களுக்கு திருப்பி அளிக்கப்படும். அரசு ஆதரவுடன் மக்கள் தொகை மாற்றங்கள் செய்யப்படாத கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

மேலும், மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக முதலீடு செய்ய விசேட சலுகைகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கப்படும்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், சமூக மேம்பாட்டுப் பணிகள் மற்றும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டமைக்கவும் அபிவிருத்தி செய்யவும் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை உறுதிசெய்வதற்கு ஒரு சர்வதேச ஒத்துழைப் பு மாநாட்டை ஏற்பாடு செய்வோம்." என்றும் சஜித் பிரேமதாச தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளார்.

அத்துடன், சட்டவிரோதமாக தள்ளிப்போடப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களை விரைவாக நடத்த தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுக்கப்படும் எனவும் குடிமக்கள் எளிதாக நீதியைப் பெறும் வகையில், மேல்முறையயீட்டு நீதிமன்ற விசாரணைகள் ஒவ்வொரு மாகாணத்திலும் நடத்தப்படத்தவும் உரிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் இதற்கு அடிப்படை உரிமைகள் மற்றும் மொழி உரிமைகள் தொடர்பான அடிப்படை நீதிமன்ற அதிகாரம் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## என்மீது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“தேரவாத வர்த்தகப் பொருளாதாரம், 2025 இற்கு அப்பால் செல்லும் செயல்முறை, ஒளிமயமான சமுதாயத்தை நோக்கி.., வெற்றிபெறும் தாய்நாடு , ஒன்றிணைந்த இலங்கை” ஆகிய 5 பிரதான விடயங்களை இந்த தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளடக்கியுள்ளது.

இங்கு மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதிய பொறிமுறைக்குள் செயற்பட தயாரா? என சஜித் , அநுரவிடம் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

உற்பத்தி தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் முதற் கட்டமாக ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும்.

ஊழல், மோசடிக்காரர்களை கைது செய்வது தொடர்பில் ஏனையோர் இன்னும் பேசிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நாம் ஏற்கனவே அதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றிவிட்டோம்.

ஊழலுக்கு எதிரான சட்டத்தை கொண்டு வந்து திருடர்களை கைது செய்ய வழிவகுத்துள்ளேன்.

நான் யாரையும் பாதுகாக்க ஜனாதிபதி கதிரையில் அமரவில்லை.

என் மீது நம்பிக்கை வைத்து ஆணையை தாருங்கள் பயனுள்ள, வளமான நாட்டை கட்டியெழுப்புகிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# கிளப் வசந்த கொலை மேலும் இருவர் கைது

கிளப் வசந்தவின் கொலையுடன் தொடர்புடைய இரண்டாவது துப்பாக்கிதாரியும், கார் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை பொலிஸாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்தேகநபர்கள் பாணந்துறை பின்வத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி நாகொட மற்றும் அ/ஹங்கல்ல பிரதேசத்தில் வசிக்கும் 29 மற்றும் 32 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக அத்துரிகிரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க தமிழரசு முடிவு?

## குகதாசன் தெரிவிப்பு

*இலங்கையில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது.*

*திருகோணமலை தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் இன்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*இதன்போது, தமிழ் பொது வேட்பாளருக்கு திருகோணமலை வாழ் மக்களதும் மக்கள் பிரதிநிதிகளதும் ஏகோபித்த ஆதரவினை வழங்க தீர்மானித்திருப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.*

*மேலும், குறித்த விடயம் தொடர்பாக மத்திய குழுவிடம் பேச்சுவார்த்தை நடத்தி அது தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*இந்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனுடன் பிரதேச சபை மற்றும் நகரசபை முன்னாள் உறுப்பினர்களுக்கும் கலந்துரையாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது*

# யாழ்ப்பாண மின்திட்டம் நிதி வழங்கிய இந்தியா

யாழ்ப்பாணத்திலுள்ள 03 மூன்று தீவுகளில் கலப்பு மின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முதலாம் கட்ட நிதியை இந்தியா வழங்கியுள்ளது.

இந்த நிதியை நேற்று புதன்கிழமை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சுலக்ஷனா ஜயவர்தன மற்றும் இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபையின் தலைவர் ரஞ்சித் சேபால ஆகியோரிடம் இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜவா வழங்கி வைத்தார்.







செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கிளிநொச்சியில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஆதரவு கூட்டங்கள்



ஜனாதிபதி தேர்தலில் ஈழத்தமிழ் மக்களை பிரநிதித்துவப்படுத்தி போட்டியிடவுள்ள பா. அரிய நேத்திரனுக்கு தற்போது ஆதரவு அதிகரித்து வருவருகின்றது. அதன்படி, இன்று கிளிநொச்சி இராமநாதபுரம், சின்னச்சந்தை பிரதேசத்திற்கு சென்ற தமிழ்ப் பொது வேட்பாளருக்கு பொது மக்களால் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கின் சிவில் அமைப்புகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரான பா. அரியநேத்திரன் சங்குச்சின்னத்தில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார். இந்நிலையில், தற்போது அவர் தேர்தல் பிரச்சாங்களை ஆரம்பித்துள்ளார். எதிர்வரும் சில தினங்களில் கிழக்கிலும் தேர்தல் பிரச்சாரங்களை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சியில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு கூட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன

# நல்லூரில் ஆலயத்தில் இன்று கஜவல்லி மஹாவல்லி உற்சவம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 21ஆம் திருவிழாவான இன்றைய தினம் வியாழக்கிழமை காலை கஜவல்லி மஹாவல்லி உற்சவம் நடைபெற்றது.

காலை நடைபெற்ற வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து தங்க அன்ன வாகனத்தில் கஜவல்லி மஹாவல்லி எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தமை முக்கிய அம்சமாகும்.

அதேவேளை இன்று மாலை தங்க ரத உற்சவமும் நாளையதினம்வெள்ளிக்கிழமை காலை மாம்பழத் திருவிழாவும் மாலை ஒருமுக திருவிழாவும் நடைபெறவுள்ளது.

அத்துடன்நாளை மறுதினம்சனிக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும்






# அரியாலையில் 3.6 ஏக்கர் காணியை கையகப்படுத்த இராணுவம் முயற்சி

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கஜேந்திரன்



யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் இராணுவத்தினர் தங்கள் தேவைக்காக 3.6 ஏக்கர் தனியார் காணியைப் பிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ்மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில், ஒருங்கிணைப்பு குழு தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுவின் கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தொடர்பில் கஜேந்திரன் தெரிவித்தார்.

இங்கு கஜேந்திரன் மேலும் தெரிவிக்கையில், “அரியாலைப் பகுதியில் தனியாருக்கு சொந்தமான சுமார் 8.6 ஏக்கர் காணியில் 3.6 ஏக்கரை இராணுவத்தினர் தங்களின் தேவைக்காக சுவீகரிக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகிறது அதை நிறுத்த வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்து கருத்து தெரிவித்த நல் லூர் பிரதேச செயலாளர், குறித்த பகுதியில் 3.6 ஏக்கர் காணியை எடுப்பதற்கான கோரிக்கை கிடைத்து என்று தெரிவித்தார்.

# அநுர குமரவின் தேர்தல் அலுவலகம் தீ வைத்து எரிப்பு

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக மீரிகம பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் மாற்று கட்சியினரால் தீ வைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை மாற்றுக் கட்சியை சேர்ந்த நபர் ஒருவர் இந்த அலுவலகத்தை சேதப்படுத்தியுள்ளதாக இந்த பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

மீரிகம பொலிஸில் அளிக்கப்பட்டுள்ள முறைப்பாடடின் பிரகாரம் சந்தேக நபரை தேடும் நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் 23 நாட்கள் மாத்திரமே உள்ள நிலையில் நாட்டில் தேர்தல் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன.

இதுவரை 1155 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு இன்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.




# கடவுச்சீட்டு வழங்கலில் நெருக்கடி ஒக்டோபர் 16 வரையில் தொடரும்

கடவுச்சீட்டுகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி எதிர்வரும் ஒக்டோபர் 16ஆம் திகதியுடன் முடிவுக்கு வரும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதன்படி, வெளிநாட்டு கடவுச்சீட்டு பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக தாம் வருத்தம் தெரிவிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாளாந்தம் வழங்கப்படும் வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மு.காவின் உச்சபீடத்தில் இருந்து ஹரீஸ் இடைநிறுத்தம் வாபஸ்

## செயலாளர் நிஸாம் காரியப்பர் அறிவிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்கட்சியின் உயர் பீடத்தில் இருந்து அக்கட்சியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸை இடைநிறுத்தும் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் ஹரீஸ் எம்.பி. மீண்டும் கட்சியின் பிரதித் தலைவராக செயற்படுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் விசேட உச்ச பீடக் கூட்டம் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் புதன்கிழமை





(28) மாலை மருதமுனை தனியார் விடுதியில் இடம்பெற்றது.

கட்சியின் உயர்பீட அங்கத்துவத்தை இடைநிறுத்தி அனுப்பப்பட்ட கடிதத்திற்கு ஹரீஸ் எம்.பி சத்தியக் கடதாசி மூலமாக தலைவருக்கு அனுப்பியிருந்த பதில் இதன்போது ஆராயப்பட்டது.

அதில் அவர் மிகத் தெளிவாக கூறியுள்ள விடயம் யாதெனில், தான் 2024.08.04 ஆம் திகதி கூடி உச்ச பீடம் எடுத்த முடிவுடன் முற்று முழுதாக இருப்பதாகவும் தனக்கு இது சம்பந்தமாக எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்றும் தெளிவாக தெரிவித்துள்ளார்.

தனக்கு ஆரம்ப இரண்டு வாரங்களாக சஜித் பிரேமதாசவுடைய பிரச்சாரக் கூட்டங்களுக்கு வர முடியாமல்போனதற்கு காரணம் தன்னுடைய சுகவீனம் என்று தெரிவித்துள்ள ஹரீஸ் அதை நிரூபிப்பதற்கு ஒரு வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை இணைத்து அனுப்பியுள்ளார்.

மேலும், அதற்குப் பிற்பாடு நடத்தப்பட்ட சஜித் பிரேமதாஸவின் சகல பிரச்சாரக் கூட்டங்களுக்கும் ஹரீஸ் தொடர்ச்சியாக கலந்து கொண்டிருந்தார்.

இதன் அடிப்படையில் அவரால் அனுப்பப்பட்ட சத்திய கடுதாசியை ஆராய்ந்த உயர்பீடம், ஹரீஸின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு அவரை உயர் பீத்தில் இருந்து இடைநிறுத்தும் தீர்மானத்தை நீக்கிக் கொண்டதாக மு.கா செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அம்பாறையில்தொழிற்சாலைகள் அமைத்து மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம்

## ஆலையடிவேம்பில் சஜித் வாக்குறுதி

*(வி.ரி.சகாதேவராஜா)*

*ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அம்பாறையிலுள்ள 4 தொகுதிகளிலும் உற்பத்திதொழிற்சாலைகள் அமைக்கப்படும். அவற்றின் ஊடாக அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.*

*ஆலையடிவேம்பு பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,*

*உயர் தரத்திலான ஐம்பது கிலோகிராம் உரமூட்டையை 5000 ஷரூபாய்க்கு வழங்குவோம். உரத்தை வழங்கும் போது கருப்பு சந்தை மாபியாக்களுக்கு இடமளிக்காமல்முறையானதிட்டமிடலுடன் அவற்றை விநியோகிப்போம். நியாயமான விலையில் திரவ உரத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்போம்.*

*கொவிட் தொற்றினாலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாலும், பொருளாதார நெருக்கடிகளால் நாடு வங்குரோத்தடைந்தமையாலும் வீழ்ச்சியடைந்த விவசாயத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்காக கடன் தள்ளுபடி செய்யப்படும்.*

*அதேபோன்று நெல்லுக்கு ஸ்திறமான நிர்ணய விலையை வழங்குவோம். நவீன முறைமையின் கீழ் விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரந்துபட்ட நீர் வழங்கள் செயல்திட்டமும்நடைமுறைப்படுத்தப்படும். இங்குள்ள அனைத்துபாடசாலைகளையும் நவீன பாடசாலைகளாக்கி தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவோம் என்றார்*

# ரணில் வாக்குறுதியை வழங்குவார் ஆனால் அவற்றை செய்யமாட்டார்

## விக்னேஸ்வரன்



ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க பேச்சில் மட்டும் வாக்குறுதியை வழங்குவார். ஆனால் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்ய மாட்டார் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் வடமாகாண முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நல்லூர் கோவில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் பொது வேட்பாளரின் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக பேசப்பட்டது. நான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னர் ஆதரவு வழங்கிய பேசியது உண்மை.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கலாநிதி விக்னேஸ்வரன் தலைமையில் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுடன் பல பேச்சுக்களை நடத்தினோம். 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் நிரந்தர தீர்வாக நாம் ஏற்றுக் கொள்ளாத நிலையில் குறைந்தபட்சம் அதிலுள்ள அதிகாரங்களையாவது நடைமுறைப்படுத்த ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

பேச்சு வார்த்தையில் 13 ஐ நடைமுறைப்படுத்துவதற்காகன நிபுணர் குழு பரிந்துரைகளை வழங்குவதற்காக நிர்மலா சந்திரகாசன் தலைமையில் நிபுணர் குழுவுக்கான பெயர்களை வழங்கினோம் ஆனால் ரணில் விக்ரமசிங்க குறித்த குழுவை அங்கீகரிக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் சாதகமான நிலைப்பாட்டை மேற்கொள்வார் என்ற நம்பிக்கையில் அவர் மீது நம்பிக்கை வைத்தோம். ஆனால் ரணில் விக்கிரமசிங்க பேச்சில் மட்டும் செயல்படுத்தும் நபராக காணப்பட்டாரே தவிர நடைமுறையில் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை.

அதன் காரணமாக தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற அவசியத்தை முதலில் முன்வைத்து முன்மொழிந்தவர்களில் நானும் ஒருவன். நான் கொழும்பில் இரண்டு தடவைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் பொது வேட்பாளரின் பிரசாரக் கூட்டங்களுக்கு செல்ல முடியவில்லை. இருந்தாலும் எனது கட்சி சார்பில் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்" என்றும் அவர் தெரிவித்தார்.

# யாழ். பஸ் நிலையத்தில் 24 மணி நேரமும் பொலிஸ் காவலரண் செயற்பட வேண்டும்

## திடீர்ச் சோதனைகளை நடத்தவும் ஆளுநர் சார்ள்ஸ் உத்தரவு

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் திடீர் சோதனைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளதுடன், பஸ் நிலையத்தில் 24 மணித்தியாலமும் பொலிஸ் காவலரண் செயற்படுத்தப்பட வேண்டும்எனவும்உத்தர விட்டுள்ளார்.



யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள், எதிர்காலத்தில் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

குடிநீர் பிரச்சினை, வீதி சீரின்மை, காணி பிணக்குகள், போக்குவரத்து சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்தும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

யாழ் மத்திய பஸ் நிலையத்திலும், முற்றவெளி மற்றும் கோட்டையை சூழவுள்ள பகுதிகளிலும் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொதுமக்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய, யாழ் மத்திய பஸ் நிலையத்தில் திடீர் சோதனைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு, ஆளுநர் பணிப்புரை விடுத்தார். அத்துடன் பஸ் நிலையத்தில் 24 மணித்தியாலமும் பொலிஸ் காவலரண் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் கூறினார்.

மேலும் முற்றவெளி மற்றும் கோட்டையை சூழவுள்ள பகுதிகளில் இடம்பெறுவதாக கூறப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க, சிறந்த பொறிமுறை ஒன்றை திட்டமிட்டு துரித நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 826 திட்டங்களை செயல்படுத்த இந்த வருடம் 322 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் 734 திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. மிக நீண்ட காலத்தின் பின்னர் திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதியை உரியவாறு பயன்படுத்த வேண்டும் என ஆளுநர் அவர்கள் தெரிவித்தார். அத்துடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பிரதேசத்தில் வாழும் பொதுமக்கள் தெளிவுப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். (01)

# அதிகரிக்கும் வெப்பம்! மக்களுக்கு எச்சரிக்கை

நாட்டில்தற்போது அதிகரித்து வரும்வெப்பநிலையினால், தோல் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக மருத்துவநிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு- சீமாட்டி சிறுவர் மருத்து வமனையின் சிறுவர் நோய் தொடர்பான விசேடமருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளதாவது,

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வெப்பநிலையால் குழந்தைகளிடையே தோல் நோய் பிரச்சினைகள் மிகவும் பொதுவான ஒன்று. அதிகரிக்கும் வெப்பநிலையினால் தோல் நோய்கள் ஏற்படுவதோடு உடலில் நீர்ச்சத்து குறைபாடு அதிகரிக்கும்.

எனவே அதிக சூரிய ஒளி படும் இடங்களில் இருப்பதைத் தவிர்ப்பதோடு, அதிகளவு தண்ணீர் பருக வேண்டும் செயற்கையான குளிர்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து தண்ணீர், எலுமிச்சை சாறு, இளநீர் போன்றவற்றைப் பருக வேண்டும் எனவும் பிள்ளைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிர்ப்பாட்ட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சூரியன் தெற்கு நோக்கிய நகர்வதால் செப்டெம்பர் 6 ம் திகதி வரையில் சூரியன் நாட்டின் பல பிரதேசங்களுக்கு மேலாக உச்சம் கொடுக்கின்றது. மதியம் சுமார் 12.11 மணியளவில் நெடுந்தீவு, பூநகரி, தட்டுவன்கோட்டை மற்றும் சுண்டிக்குளம் போன்ற இடங்களுக்கு மேலாக சூரியன் நேற்று புதன்கிழமை உச்சம் கொடுத்தது.

இந்த நிகழ்வுக்கு உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களே காரணம்என வளிமண்டலவியல் ஆய்வுத் துறையின்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்கிடங்களும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# வடக்கு, கிழக்கு கரையோர பகுதிகளில் இன்று முதல் கடும் காற்று வீசும் வாய்ப்பு

இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 40 கிலோ மீற்றருக்கு கூடுதலாக வீசும் வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

அடுத்த நாட்களுக்கான கால நிலை மாற்றம் குறித்த அவரது பதிவின் விபரம் வருமாறு-

"இன்று வடக்கு வங்காள விரிகுடாவில் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினத்துக்கும் புவனேஸ்வர் இற்கும் இடைப்பட்ட கடல் பிராந்தியத்தில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இத்தாழமுக்கம் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து எதிர்வரும் சனிக்கிழமை அளவில் இந்தியாவின் விசாகப்பட்டினத்துக்கருகில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாழமுக்கம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனினும் சில இடங்களில் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் சில இடங்களில் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.



இன்று முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 40 கிலோ மீற்றருக்கு கூடுதலாக வீசும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது. பல நாள் கலங்களில் மீன்பிடி செயற்பாடுகளுக்கு ஆழ் கடலுக்கு சென்றவர்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம்.

அதேவேளை இந்த தாழமுக்கம் காரணமாக மழை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இடி மின்னல் நிகழ்ச்சிக்கும் வாய்ப்புள்ளது. எனவே இது தொடர்பாக அவதானமாக இருப்பது சிறந்தது.

இக்காலத்தில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் நெல் மற்றும் வெங்காயம் அறுவடை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் மிதமான மழையை எதிர்கொள்வதற்கான போதுமான தயார்ப்படுத்தலை மேற்கொள்வது அவசியம்.




# பரணவிதாரண எம்.பி.யாகிறார்

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் தலதா அதுகோரல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்ததன் காரணமாக ஏற்பட்ட பதவி வெற்றிடத்துக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கருணாரத்ன பரணவிதானவை நியமிக்க பெயர் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல உறுப்பினர் பதவியை துறந்ததன் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியுள்ளாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்தார்.

தெரிவத்தாட்சி அலுவலர் அரசியலமைப்பின் 99 (13 (ஆ) ஆம் உப உறுப்புரைக்கமைய மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (2) ஆவது உறுப்புரையின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தத் தேர்தல் மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினராக கருணாரத்ன பரணவிதா நியமிக்கப்பட்டுள்ளார்.




# காணாமல்போன தமிழக மீனவர் சடலமாக மீட்பு

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த 26 ஆம் திகதி விசைப்படகில் மீன்பிடிக்க சென்ற, டெல்வின் ராஜ், வெள்ளைச்சாமி, சுரேஷ், எமரிட் ஆகிய நால்வரும் மீன் பிடித்து விட்டு செவ்வாய்க்கிழமை கரை திரும்பிய போது சூறைக்காற்று காரணமாக நடுக்கடலில் படகு மூழ்கி விபத்துக்குள்ளானது.

மூழ்கிய படகில் இருந்த இரண்டு மீனவர்கள் நீந்தி இலங்கை கடற்படையினரின் உதவியால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு விமானம் மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் காணாமல் போன எமரிட் மற்றும் வெள்ளைச்சாமி ஆகிய இருவரை ராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகள் அனுமதியோடு சக மீனவர்கள் இரண்டு நாட்களாக தேடி வந்த நிலையில் நேற்று மாலை எமரிட் என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.




# காட்டு யானை தாக்கி மாணவன் படுகாயம்

மூதூர் – ஸ்ரீ நாராயணபுரம் பகுதியில் பாடசாலை மாணவன் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கல்வி கற்கும் 16 வயதுடைய மாணவனே காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ நாராயணபுரம் பகுதியைச் சேர்ந்த மேற்படி மாணவன் கிளிவெட்டி மகா வித்தியாலயத்துக்குப் பிரத்தியேக வகுப்புக்காகச் சைக்கிளில் சென்றபோது ஸ்ரீ நாராயணர் ஆலயத்துக்கு முன்னால் வைத்து காட்டு யானை தாக்கியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு முதல் காட்டு யானைகளின் நடமாட்டம் அப்பகுதியில் காணப்பட்டது என்றும், நீண்டகாலமாக மூதூர் பகுதியில் காட்டு யானைகளால் தொடர்ச்சியான பல தாக்குதல் சம்பவங்களும் உயிரிழப்புச் சம்பவங்களும் பதிவாகி வருகின்றன என்றும், பயிர்களையும் யானைகள் சேதம் செய்து வருகின்றன என்றும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இளம் கடற்றொழிலாளி திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த வேளை திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

# புலோலியில் விபத்தில் சிக்கியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

*யாழ்ப்பாணம், வடமராட்சியில் விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.*

*வடமராட்சி, புலோலி பகுதியைச்சேர்ந்த 39 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.*

*புலோலி பகுதியில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற வான் – சைக்கிள் விபத்தில் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.*

*அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2024இல் வெளியிடப்பெற்றது.